

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன், கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கரூர் மாவட்ட கழகம் சார்பில், மாவட்டச் செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் 3 ஆயிரம் மாணவர்கள் பங்கேற்ற பிரம்மாண்ட விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்தார்.



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் வடக்கு ஒன்றியம் ரெட்டாக்குறிச்சி கிராமத்தில் இருந்து அடரி, களத்தூர் வழியாக கள்ளக்குறிச்சி வரை செல்லும் புதிய பேருந்து 12.பி. வழித்தடத்தை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தொடங்கி வைத்தார்.உடன் மங்களூர் ஒன்றிய கழக செயலாளர்கள் அடரி.த.சின்னசாமி பட்டூர். வீர. அமிர்தலிங்கம், ஒன்றிய கழக நிர்வாகிகள் மேட்டூர் அ.சேகர், கே.என்.டி. சங்கர், இராமதாஸ், மாங்குளம் பொன். வெங்கடேசன் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### மருத்துவத் துறையில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் புரட்சி செய்து வருகிறார்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு உரை!

திருவண்ணாமலை, ஜன. 7 -

திருவண்ணாமலை மண்டல தி.மு.க. மருத்துவ அணி சார்பில், திருவண்ணாமலையில் சமூக நீதி மற்றும் பகுத்தறிவுப் பாசறைக் கூட்டம் நடைபெற்றது. வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி. கணேசன் ஆகியோர் கலந்து பேசினர்.



04.01.2025சனிக்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு, அருணை பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இதில் மாநில மருத்துவர் அணி துணைத் தலைவரும் மண்டல பொறுப்பாளருமான டாக்டர் எ.வ.வே.கம்பன் தலைமை வகித்தார்.

தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சமூகநீதி மற்றும் பகுத்தறிவு பாசறைக் கூட்டத்தை தொடங்கி வைத்து, பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது.

கழகத்தில் 23 அணிகள் இருக்கிறது. ஆனால் 23அணிகளில் இருப்பவர்கள் மனிதர்களே, மனிதர்கள் காப்பாற்றப்படுபவர்கள் என்று சொன்னால் இயற்கை கொடுத்த வரம் வேறு யாரும் அல்ல, இங்கு இருக்கிற மருத்துவர்கள் தான். இயற்கை கொடுத்த வரம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 95வயதையும் கடந்தார் என்றால் இந்த மருத்துவம் தான். மனிதர்களுக்கு மருத்துவம் மற்றும் சமூகநீதி என்பது நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றது. இதற்கு ஒரு சிறுகதை சொல்ல வேண்டும். நான் சிறுபிள்ளையாக இருக்கும் போது தண்டராம்பட்டை அடுத்த இராயண்டபுரம் பகுதியில் உள்ள எனது பாட்டி வீட்டிற்கு வந்திருந்தேன். அப்போது எனக்கு அம்மைநோய் தொற்று ஏற்பட்டது. இதே வேளையில் தென்பெண்ணை ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. 27 நாட்களுக்கு ஊரை விட்டி வெளியே வர முடியாத சூழ்நிலையில் 28ம் நாள் ஆற்றில் தண்ணீரும் குறைந்தது அம்மை தாக்கமும் குறைந்தது.

இந்த நோயிக்கு தடுப்பூசி போட்டால் சரியாகி விடும் என்று பகுத்தறிவோடு பார்க்க வேண்டும். தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நடக்கிறது. அனைவருக்கும் சமமான வசதி கிடைக்க வேண்டும் என்று சொன்னவர் பெரியார். கொள்கை திட்டம் தீட்டி வகுத்து தந்தவர் பேரறிஞர் அண்ணா, அதனை செயலாக்கத்திற்கு கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். இவர்களின் வழியில் இப்போது பல திட்டங் ங்களை தீட்டியும், புரட்சிகரமாக ஆட்சி செய்துவருபவருமான எனது மு.க. ஸ்டாலின் அவர்கள் மருத்துவத்தில் புரட்சி செய்து வருகிறார்.

நம்மை காக்கும் 48 என்ற திட்டத்தின் மூலம் தமிழகத்தில் 2 லட்சம் பேருக்கு உயிர் காத்த தாயாக இருப்பவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தான்.

இவ்வாறு பொதுப் பணித்துறை அமைச்சர் பேசினார்.

இதனைத் தொடர்ந்து திராவிடர் இயக்க தமிழர் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன், மாநில மருத்துவர் அணி தலைவர் டாக்டர் கனிமொழி என். வி.என்.சோமு, மாநில மருத்துவரணி துணை செயலாளர் எழிலன் நாகநாதன் ஆகியோர் தொடந்து பேசினர்.

இந்த பாசறைக் கூட்டத்திற்கு சமூக நீதி காவலர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பாசறைக் கூட்டத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் மலையரசன், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட செயலாளர் வசந்தம் எஸ். கார்த்திகேயன்.எம்.எல்.ஏ., கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட செயலாளர் த.உதயசூரியன், சட்டமன்ற மன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி. சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி, திருவண்ணாமலை தெற்கு மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் பிரவீன் ஸ்ரீதரன், தி.மலை வடக்கு மாவட்ட அமைப்பாளர் மகேந்திரன் மற்றும் சமூக நீதிக் காவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், திருவண்ணாமலை மண்டலத்திற்குட்பட்ட கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள், நிர்வாகிகள், மருத்துவர்கள், செவிலியர்கள், ஆய்வக வல்லுநர்கள், மருந்தாளுநர்கள், அவசர ஊர்தி ஓட்டுநர்கள் மற்றும் மருத்துவ துறையைச் சார்ந்த அனைவரும் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சியில் உள்ள கூட்டுறவு சிறு சிறப்பங்காடி அமராவதி 2 இல் கூட்டுறவுத்துறையின் சார்பில் "கூட்டுறவு பொங்கல் என்ற மளிகைப் பொருட்கள்" அடங்கிய பொங்கல் தொகுப்பு விற்பனையை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் மற்றும் பலர் உள்ளனர்.

### புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் –

# அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் முடிவுற்ற பல்வேறு பணிகள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்!

புதுக்கோட்டை, ஜன. 7 -

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் மற்றும் அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், முடிவுற்ற பல்வேறு பணிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 05.01.2025 அன்று திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

பின்னர் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் வாழும் பொது மக்களின் வளர்ச்சியில் அதிக முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், சாலை வசதி, மின் வசதி, சுகாதார வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, திருமயம் மற்றும் அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் முடிவுற்ற பல்வேறு பணிகளை திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

அதன் அடிப்படையில், திருமயம் ஊராட்சி ஒன்றியம், லெம்பலக்குடி ஊராட்சி, கப்பதானபட்டியில், புதிய சமுதாயக்கூடம் கட்டிடத்தினையும், வி.லெட்சுமிபுரம் ஊராட்சியில் அமைக்கப்பட்டுள்ள புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியினையும், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், பூனையன் குடியிருப்பு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய பேருந்து நிழற்குடையினையும், வடகாட்டுப்பட்டி, நம்பூரணிபட்டி மற்றும் கே.ராயவரம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள புதிய பேவர் பிளாக்குகளையும், புதுநிலைவயல் பகுதியில் கட்டப்பட்டுள்ள புதிய சமுதாயக் கூடத்தினையும், ஏத்த நாடு பகுதியில் புதிய பகுதி நேர நியாயவிலைக் கடையினையும், கீரணிப்பட்டியில் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி கட்டிடத்தினையும் திறந்து வைக்கப்பட்டது.

மேலும், திறந்து வைக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் அனைத்தையும் இப்பகுதி பொதுமக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேலும், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், நம்பூரணிபட்டியில் புதிதாக கட்டப்படவுள்ள சமுதாயக் கூடம் மற்றும் துணை சுகாதார நிலையம் கட்டிடப் பணிகளையும், கீழாநிலைக்கோட்டையில் கட்டப்படவுள்ள துணை சுகாதார நிலையம் பணியினையும் அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டது. இப்பணியினை விரைவாகவும், தரமாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர தொடர்புடைய அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற மக்கள் நலத்திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு தங்களது பொருளாதாரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், திருமயம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆர்.சங்கர், பி.வெங்கடேசன், திருமயம் வட்டாட்சியர் புவியரசன், இரா.கணேசன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் காட்டுச்சோரியில் ரூ.42.65 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட கிராம ஊராட்சி செயலகம் கட்டிடத்தை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் திறந்து வைத்தார். உடன் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், மாவட்ட துணைச் செயலாளர் மு.ஞானவேலன், செம்பனார் கோயில் ஒன்றியச் செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், பி.எம்.அன்பழகன், அமிர்தவிஜயகுமார், ஒன்றியக் குழு தலைவர் நந்தினிஸ்ரீதர், துணைத்தலைவர் பாஸ்கர் மற்றும் பலர் உள்ளனர்.



கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் வேப்பூர் வ.குணசேகரன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் தலைமை நல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பாவாடை கோவிந்தசாமி தலைமை ஏற்று வேப்பூர் ஊராட்சியைச் சார்ந்த இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். அருகில் வேப்பூர் கிளை செயலாளர்கள் அரிஈசன், விஜயன், செல்வஅரசன் ஆகியோர் உள்ளனர்.

# தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த எல்.கணேசன் - புலவர் முத்து வாவாசிக்கு விருது!

## விருதாளர்களுக்கு அமைச்சர், மாவட்டச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் வாழ்த்து!

தஞ்சாவூர், ஜன. 7 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் விருதுகளில் கழகத் தோழர்களால் முக்கிய விருதாக போற்றப்படும் பேரறிஞர் அண்ணா விருது மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரால் வழங்கப்படும் விருது தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த எல். கணேசன் மற்றும் முத்து வாவாசி ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தி எதிர்பு போராட்டத்தில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் ஆகியோரோடு இந்தி எதிர்ப்பு போராட்டங்களை நடத்தி சிறைச் சென்றவர்.

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியவர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பல்வேறு முக்கிய பொறுப்புகளில் பணியாற்றியவருமான தஞ்சை மத்திய மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், கண்ணத்தங்குடி கீழையூர் கிராமத்தில் பிறந்த எல்.கணேசன் அவர்களுக்கு பேரறிஞர் அண்ணா விருதினையும்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் தமிழ்நாடு அரசின் சார்பில் முதல் விருதினை பெறுபவர் கலைஞர் அவர்களின் செயலாளராக பணியாற்றியவரும், இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனத்தில் தமிழ் தொண்டாற்றியவரும், முத்தமிழறிஞர் பற்றிய பல்வேறு நூல்களை எழுத்தியவருமான, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் பிறந்தவருமான முத்து வாவாசி அவர்களுக்கும் வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் விருது பெறும் கழக முன்னோடிகள் இருவரையும் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாண சுந்தரம்,எம்.பி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ,

ச.முரசொலி எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், டி.கே.ஜி.நீலமேகம், என்.அசோக்குமார், தஞ்சை மேயர் சண்.இராமநாதன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணிய மூர்த்தி, துணை மேயர்கள் சு.ப.தமிழழகன், அஞ்சுகம் பூபதி, மாவட்ட ஊராட்சிக்குழு துணை தலைவர் எஸ்.கே.முத்து ச்செல்வம் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பகுதி, மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் நேரில் சந்தித்து வாழ்த்து கூறினர்.



வனத்துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடி ஆலோசனைக்கிணங்க துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி முகையூர் ஒன்றியம் கண்டாச்சிபுரம், ஆலம்பாடி, காரனை பெரிச்சானூர், புத்தூர், ஆற்காடு, முகையூர் ஆகிய ஊர்களில் உள்ள அரசு பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள், எழுதுகோல், இனிப்புகள் உள்ளிட்ட கல்வி உபகரணங்களை விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி அவர்கள் வழங்கினார். ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், எஸ்.லூயிஸ், பி.வி.ஆர்.சு விசுவநாதன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் எம்.ஆர் ராஜீவ்காந்தி, ஒன்றிய குழு தலைவர் தனலட்சுமி உமேஸ்வரன், நகரச் செயலாளர் கோபிகிருஷ்ணன், பேரூராட்சி மன்றத் தலைவர் ராயல் அன்பு, பேரூர் செயலாளர் பா ஜீவா, அரசு வழக்கறிஞர் கார்த்திகேயன் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், அணி நிர்வாகிகள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர் பெருமக்கள் பலர் கலந்து கொண்டனர்.